REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 83630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆடி 26உ சனி (10—8—57) ★ ★ வெளியூர்: ஆடி 27உ ஞாயிறு (11—8—57) [இதழ் 49

ஆச்சரியம்தான்!

1952—57-ம் ஆண்டுக்கிடையில், மக்கள் சபையில் டெல்லி சர்க்கார் தந்த சுமார் 5,000 உறுதிமொழிகளில் 4,000 உறுதிமொழிகள்வரை நிறைவேற்றப்பட்டதாம்!

இந்தத் தகவலை, சர்க்கார் உறுதிமொழிக் கமிட்டியைத் துவக்கிவைத்துப் பேசுகையில், சபைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார் தெரிவித்துள்ளார்.

'சர்க்காரின் இந்தச் சாதனை, பெருமைக்குரியது என்கிறாராம், அவர்!

'டெல்லியிலோ பட்டணத்திலோ இருந்து பத்து பேர் ஆளுவது சுயராச்சியமல்ல'

'தங்கள் சொந்தத்திற்காக ஏற்பட்டதல்ல அரசியல் கட்சிகள்'

'மக்களின் உயர்வுக்காக பாடுபடும் முயற்சிதான் அரசியல் கட்சிகள்'

தண்டலம் பொதுநல மாநாட்டில் முதலமைச்சர் காமராசர் தந்த விளக்கம்

"நம்முடைய நாடு ரொம்ப வறுமையான—ஏழ்மையான தேசம். இந்த தேச மக்களுடைய க்ஷேமம்—இதிலே அரசியல் வித்தியாசத்திற்கு இடமில்லை; எல்லோரும் நன்றாக வாழவேண்டுமென்பதில் சண்டையா இருக்கு? சச்சரவா இருக்கு? அபிப்பிராய பேதத்திற்கு இடமே கிடையாது.

"அரசியல் வேறுபாடு எல்லாம் மக்களுடைய நலனுக்குத்தான்; இந்த நாட்டிலுள்ள ஏழைகளுடைய நலனுக்காக—அவர்களுடைய உயர்வுக்காகப் பாடுபடவேண்டுமென்ற முயற்சிதான் அரசியல் கட்சிகளேதவிர, தங்கள் சொந்தத்துக்காக ஏற்பட்டதல்ல கட்சிகள்; ஆகையினால், கிராம உயர்வுக்கு—நாட்டு மக்கள் உயர்வுக்கு—கிராம வசதிக்கு கட்சி வேறுபாடுகள் அவசியமல்ல!

"கிராமப் பிரச்சினை என்பது பொதுப் பிரச்சினை—யாருக்கும் பொதுப் பிரச்சினை அது; ஒரு கிராமத்தில்—உங்களுடைய ஒரு கிராமத்திலிருக்கும் பிரச்சினைதான் அடுத்த கிராமத்துக்கு; அதற்கடுத்த கிராமத்திற்கு—பக்கத்திற்கு; எனவே, முக்கியமாக நீங்கள் கேட்டிருக்கக்கூடிய விஷயங்கள் ரோடு வசதி, பள்ளிக்கூடமில்லாதவைகளுக்குப் பள்ளிக்கூடம், குடிதண்ணீர் இல்லாத இடங்களில் குடிதண்ணீர், மின்சார வசதி இல்லாத ஊரிலே மின்சார வசதி வேண்டும் என்பது; 'மின்சாரம் இருக்கக்கூடிய ஊர்களிலே 10-மணி நேரத்திற்குமேல் மின்சாரத்தை உபயோகிக்க வசதியில்லையே; அதற்கு வேண்டிய வசதி இவைகள் செய்து தரவேண்டும்' என்ற கோரிக்கைகள்; இதைப்போன்ற பல்வேறு கோரிக்கைகள் இருக்க முடியும் என்று நான் நினைக்கின்றேன். இது நம்முடைய கிராமத்துக்கு மட்டுமல்ல-பல கிராமங்களுக்கும் பொதுப் பிரச்சினை. இந்தப் பிரச்சினையை நாம் தீர்க்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றோம்.

"சுயராஜ்யம் என்றால் என்ன? யாரோ ராஜாங்கம் நடத்துகின்றார்கள் என்ற உணர்ச்சி வரக்கூடாது; அது சுயராஜ்யமல்ல! சுயராஜ்யமென்று சொன்னால், மகாத்மா காந்தி கேட்ட சுயராஜ்யத்திற்கு — யாரோ, பட்டணத்திலேயே டில்லியிலேயோ உட்கார்ந்து 10 பேர் ராஜாங்கம் நடத்துகிறார்களே, அதுவா சுயராஜ்யம்? அதல்ல"

—இவ்வாறு, முதலமைச்சர் காமராசர் அவர்கள், தண்டலம் கிராமத்தில் நடைபெற்ற காஞ்சீபுரம் தொகுதி கிராமங்களின் பொது நல மாநாட்டில் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்; அவரது பேச்சின் முழு விவரம் இங்கு தரப்படுகிறது:—

"இன்று இந்தக் கிராமத்தில் உங்களையெல்லாம் பார்ப்பதில் எனக்கு மிக மகிழ்ச்சி; திரு. அண்ணாதுரையவர்கள், என்னை கிராமங்களுக்குச் செல்லவேண்டும்—கிராம நிலைமை தெரிந்த முதன் மந்திரியாக இருந்தாலும்கூட இன்னும் எத்தனை கிராமங்கள் போக்குவரத்து வசதிகளின்றி இருக்கின்றனவென்பதை தெரிவதற்கு அது ஏதுவாயிருக்குமென்று சொன்னார்; அது உண்மைதான்; பரந்த பெரிய இந்நாட்டில் ஆயிரக்கணக்கான கிராமங்களுக்கு நல்ல போக்குவரவு வசதிகள் கிடையாது; குடிப்பதற்குத் தண்ணீர் கிடையாது; ஏழை மக்களுக்குக் குடியிருப்பதற்கு வீட்டு வசதியே கிடையாது.

"நாடு சுதந்திரம் அடைந்து பத்து ஆண்டுகள்தான் ஆகின்றது; எல்லாவிதமான நல்ல காரியங்களும் செய்யவேண்டுமென்று நமக்கு ஆசையிருந்தாலும், அதற்கு முயற்சியெடுத்தாலும் காலதாமதம் ஏற்பட்டேதான் தீரும். வெகு நாட்களாக உள்ள குறைகளை ஒரே நாளில் நிவர்த்தி செய்து கொடுத்துவிடமுடியாது.

"மகாத்மா காந்தியடிகள் இந்த நாட்டுக்கு சுயராஜ்யம் வேண்டுமென்று கேட்ட காலத்தில, எதை மனதில் நினைத்துக் கேட்டார்? அன்னிய ஆட்சியை மாற்ற வேண்டுமென்று மனதில் நினைக்கவில்லை அவர்; அதைப் பற்றி அவர் கவலையும் கொள்ளவில்லை; 'அரசியல் மாறுதல் ஏற்பட்டால்—நம்முடைய நாட்டை நாமே ஆளக்கூடிய வசதியும் வாய்ப்பும் கிடைத்தால் இந்த நாட்டிலே கோடிக்கணக்கில் வாழும் பாமரமக்கள்-ஏழைமக்கள்—பேசுவதற்கே வகை தெரியாதவர்கள்—என்ன வேண்டும் என்று திக்குத் தெரியாமல், திக்கற்றவர்களாக வாழக்கூடிய கோடிக்கணக்கான மக்களுக்கு வாழ்க்கை—புதிய வாழ்க்கை ஏற்படுத்த முடியும்; அதற்குத்தான் அரசியல் மாறுதல் வேண்டும்' என்று அன்று போராட்டத்தை நடத்தினார். அவர் மறைந்தார்; அவருடைய எண்ணம் நிறைவேறினால்தான்—கிராம மக்களிடையே நல்வாய்ப்பு மலர்ந்து, மறுமலர்ச்சி ஏற்பட்டு, வறுமை ஒழிந்து, அம்மக்கள் சுகமாக வாழ்ந்தால்தான் அவருக்கு நாம் செய்யும் பெரிய கைம்மாறு ஆகும்; அதைத் தவிர, வேறு ஒன்றும் கிடையாது; அத்தகைய நிலையை உண்டாக்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றேன்.

"அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். பல கிராமங்களிலிருந்து நீங்கள் வந்திருக்கின்றீர்கள்? மகசர் கொடுத்திருக்கின்றீர்கள்; அதை நான் இன்னும் படித்துப் பார்க்கவில்லை; ஆனால், இங்கிருந்து சென்றவுடன் அவற்றைப் படித்துப் பார்க்கப் போகின்றேன்.

'தேசிய வளர்ச்சித் திட்டமும் சமுதாய நலத் திட்டமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; இத்திட்டங்கள் யாரோ போடும் திட்டங்கள் அல்ல; உங்களுக்கு என்னவேண்டும் என்று இத்திட்டத்தின் மூலம் சொல்லலாம்; சர்க்காரிலே இதற்குப் பணம் தருகிறார்கள்; வருடத்துக்கு இவ்வளவு பணம் செலவழிக்க வேண்டுமென்று வரையறை உண்டு; இந்தப்பணத்திற்குள் உங்களுக்கு என்னென்ன செய்ய வசதிகள், வாய்ப்புகள் இருக்கின்றனவோ அவைகளை யோசனை செய்து செய்யவேண்டுமென்பதுதான் திட்டத்தினுடைய முக்கியமான நோக்கம். அந்த நோக்கம் நிறைவேறினால், கிராமப் பகுதியிலே வாழும் மக்கள் தங்களுக்கு அத்தியாவசியத் தேவை முதலில் என்ன என்பதைத் தெரிந்துகொண்டிருப்பார்கள்; தெரிந்துகொண்டு அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுப்பார்கள்; அத்தகைய உணர்ச்சி வரவேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

அரிசி மண்டல ஏற்பாட்டின் பலன்?

நோக்கம் ஈடேறவில்லை; நம்பிக்கை தளர்ந்தது

உணவுப் பொருள்களை முடக்குவோர்மீது நடவடிக்கை

அரிசி கொள்முதல் செய்ய ஏற்பாடு

புதுடில்லி, ஆக. 9—

டெல்லி சர்க்காரின் நோக்கம், தென் அரிசி மண்டலத்தைப் பொறுத்து இதுவரை ஈடேறவில்லை என்றும், அதன் நம்பிக்கை வீணாகி விட்டதென்றும் கவலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மண்டலத்திலிருந்து வெளியிடங்களுக்கு—பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களுக்கு அரிசி ஏற்றுமதி செய்வது மண்டல ஏற்பாட்டின்மூலம் தடுக்கப்பட்டதை ஒட்டி ஆந்திராவின் உபரி அரிசி, பற்றாக்குறைப் பிரதேசங்களான சென்னை, கேரள மாநிலங்களுக்குச் செல்லும் என்று டெல்லி எதிர்பார்த்ததாகவும், ஆனால் ஆந்திர வியாபாரிகள் அப்படி அனுப்பாமல் அரிசியை முடக்கி வருவதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

இந்தநிலை நீடித்தால், சர்க்கார் அந்த வியாபாரிகள்மீது கடும் நடவடிக்கை எடுக்குமென இப்போது எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

அத்தியாவசியப் பொருள்கள் திருத்தச் சட்டத்தின் கீழ், இராஜஸ்தானில் பயிறுகளையும் ஆந்திராவில் அரிசியையும் தாங்களே கொள்முதல் செய்வது எனத் தீர்மானித்திருக்கிறார்கள், டெல்லி சர்க்கார்!

ஆந்திராவில் அரிசி கொள்முதல் செய்வதற்காக, சட்டபூர்வமான அதிகாரங்களுடன் அதிகாரிகள் பலர் அனுப்பப்பட்டுவிட்டனர் என்றும், அவர்கள் கடந்த மூன்று மாத காலமாக நிலவி வரும் சராசரி விலைப்படி அரிசியைக் கொள்முதல் செய்வார்கள் என்றும் கூறப்படுகிறது.

உணவு இலாகா உதவி டைரக்டரான கே. எஸ். கிருஷ்ணன் என்பார், ஆந்திராவில் அரிசி கொள்முதல் செய்வதற்காக விசேட அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றும், அவர் இப்போது ஆந்திர உணவு மந்திரி பி. திம்மாரெட்டியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

குழந்தைகள்தான் விரும்புகின்றனராம்

இலங்கை வானொலி பற்றி மத்திய அமைச்சர் கேஸ்கர்

புதுடில்லி, ஆக. 9—

'இலங்கை வானொலி நிகழ்ச்சிகளை இந்தியாவிலுள்ள மக்கள் விரும்புகிறார்கள் என்பது தவறான கருத்தாம்?

"இலங்கை வானொலியை விரும்புவோர் பெரும்பாலும் குழந்தைகள்தான் என்று மத்திய அமைச்சர் கேஸ்கர் துணிந்து கூறியுள்ளார்.

'இந்தியாவை மட்டும் இலக்காகக் கொண்டு வர்த்தக ஒலிபரப்பு நடத்துவது நலலதல்ல' என்று இலங்கை அரசாங்கத்தின் கவனத்திற்கு இந்திய அரசாங்கம் கொண்டுவந்துள்ளதாம்.

செப்டம்பர் திங்கள் முதல், கதம்ப நிகழ்ச்சிகள் இந்திய வானொலியில் ஆரம்பமாகிறதாம்.

'ஏன் புது வரி விதிப்புகளை மேற்கொள்ளவில்லை?'

மாநிலங்கள்மீது சீறி விழுகிறது டில்லி!

புதுடில்லி, ஆக. 9—

மாநிலங்களின் வரவு-செலவுத் திட்டத்தில் சுமார் ரூ. 100 கோடி வரை துண்டுவிழுகிறதாம்!

இதைப் பார்க்கும்போது டில்லிக்கு அழுகை அழுகையாக வருகிறதாம்! இந்த நிலையால், இரண்டாம் திட்டத்திற்கு மாநிலங்கள் தரும் நிதி தொடர்ந்து அதிருப்தியாகவே இருக்கும் என்றும் டில்லி கவலைப்படுகிறதாம்!

மாநிலங்கள் எல்லாமாக தேசீய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தின்போது மொத்தம் ரூ. 40 முதல் ரூ. 50 கோடிவரை புது வரி விதிப்புகளுக்கு சம்மதம் தந்தன என்றும், ஆனால் இப்போது வரவு-செலவுத் திட்டங்களின்படி ரூ. 16 கோடி மட்டுமே புது வரி விதிப்புகள் மூலம் பெற ஏற்பாடாகியிருக்கிறது என்றும், இது மிக வருந்தத்தக்க நிலை என்றும் டெல்லி கூறுகிறதாம்!

இன்னும் வரி விதிப்புகளை அறிவிக்காத ஆந்திரம், மேற்கு வங்கம் ஆகிய இரு மாநிலங்களும் சில புதிய வரி விதிப்புகளை மேற்கொண்டாலும், அது எதிர்பார்த்ததைவிட குறைவாக இருக்கும்; ரூ. 31 கோடியைச் சரிக்கட்ட உதவாது என்றும் கூறப்படுகிறது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 10—8—57 சனி

வரவேற்கின்றோம்!

அஞ்சல்-தந்தி ஊழியர்களும், வேறு பல மத்திய அரசாங்க நிர்வாகத்தில் உள்ள நிறுவன ஊழியர்களும் எட்டாந் தேதி நடு இரவிலிருந்து வேலைநிறுத்தத்தை மேற்கொள்ள இருந்த முடிவை மாற்றிக்கொண்டுள்ளனர். அதுகண்டு நாட்டு மக்கள் அவர்களைப் பாராட்டுவர் என்றே நாம் நம்புகிறோம்.

மேற்படி ஊழியர்களின் வேலைநிறுத்த முடிவு அவசரப்பட்டு செய்யப்பட்டதன்று. ஏதோ எளிய பயனைக் கருதியும் முடிவு கட்டப்பட்டதன்று.

கடந்த இரண்டாண்டு காலத்துக்கு அதிகமாகவே, வேலைநிறுத்தத்திற்கென குறிக்கப்பட்டிருந்த கோரிக்கைகளை வற்புறுத்தி வந்துள்ளனர் அவ்வூழியர்கள். அக்கோரிக்கைகளைப் பெறுவதற்காக சென்ற இரண்டாண்டுக் காலத்தில், சம்பளம் வாங்க மறுத்துள்ளனர்; கையெழுத்து இயக்கம் நடத்தியுள்ளனர்; கோரிக்கைகளை வற்புறுத்திப் பல்லாயிரக்கணக்கான அஞ்சல் அட்டைகளை அரசாங்கத்திற்கு வரைந்துள்ளனர்.

அவர்கள் மேற்கொண்ட மேற்படி நியாயமான முயற்சிகள் எதையும் அரசாங்கம் பொருட்படுத்தவில்லை. என்றும் போல் கல்லுளி மங்கன் போன்றே அரசாங்கம் இருந்து வந்தது.

தங்களுடைய நியாயமான கோரிக்கைகளைப் பெறுவதற்காகத் தாங்கள் கையாண்ட அமைதியான முயற்சிகள் அனைத்தையும் அரசாங்கம் அலட்சியப்படுத்திவிடவே, வேறு தீவிரமான முயற்சிகளைக் கையாண்டாவது அரசாங்கத்திற்குத் தங்கள் குறைகளை உணர்த்தவேண்டும் என்ற முடிவிற்கு மேற்படி ஊழியர்கள் வரலாயினர். அம்முடிவுதான் வேலைநிறுத்தம்.

தங்கள் தேவைகளை அமைதியான முறைகள் மூலம் ஊழியர்கள் உணர்த்தியும்கூட, உணர்ந்துகொள்ளக் கூடாது என்ற எண்ணத்தில் அரசாங்கத்தின் ஆணவம் வேகமாக வளர்ந்து வந்தது போலவே, இன்றியமையாப் பண்டங்களின் விலையும் வேகமாகக் கூடிவரலாயின. ஏற்கனவே அரசாங்கத்தின் அலட்சியத்தால் அதிருப்தி அடைந்திருந்த மேற்படி ஊழியர்கள், இப்பண்டங்களின் வரைகடந்த விலையேற்றத்தின் விளைவாக, மேலும் துன்பத்தைத் தாங்கிக்கொள்ள இயலாதவர்களாயினர். அதன் முடிவுதான் வேலைநிறுத்தம்.

விண்ணப்பம் வேண்டுகோள், மனு மகசர், தூது போதல், சம்பள மறுப்பு, கையெழுத்து இயக்கம், அஞ்சல் வரைதல் ஆகிய நேரியமுறை எதற்கும் செவிசாய்க்காது இருந்துவந்த அரசாங்கம், ஊழியர்களின் வேலைநிறுத்த முடிவைக் கேட்டதும் அலறித் துடித்துக்கொண்டு எழுந்தது. அதுவரையில் ஊழியர்களின் கோரிக்கைகளை நினைத்துப் பார்ப்பதே மாபாதகம் எனக் கருதிவந்த அரசாங்கம், அக்கோரிக்கைகளை எண்ணிப் பார்த்ததுடன் வெளிப்படையாக வாயால் உச்சரிக்கவும் முன்வந்தது. ஆனால், அக்கோரிக்கைகளுக்கு என்றும்போல் இணங்க மறுத்து வந்தது.

அதே நேரத்தில் ஊழியர்களின் வேலைநிறுத்தம் செயல் உருவம் பெறாமல் இருப்பதற்குத் தம்முடைய ஆற்றல் முழுவதையும் பயன்படுத்துவதற்கும் அரசாங்கம் முன்வந்தது. அத்துடன், தன்னுடைய சாகசச் செயல்களுக்குக் கட்டுப்படாது, ஒருவேளை வேலைநிறுத்தம் குறிப்பிட்ட நாளில் நடைமுறைக்கு வந்துவிடும் பட்சத்தில், அதை முறியடிப்பதற்கான வழிவகைகள் பலவற்றையும் தனது முழுபலத்துடன் அரசாங்கம் செப்பனிடுவதிலும் வரிந்து கட்டிக்கொண்டு நின்றது. அதன் தீய விளைவுதான், ஊழியர்களிடமிருந்து வேலைநிறுத்த உரிமையைப் பறிக்கும் அவசரச் சட்டம்.

அரசாங்கத்தின் இத்தகைய கடுமையான ஆணவத்திற்கும் அச்சுறுத்தல்களுக்கும் துளியும் அஞ்சிவிடாது, அஞ்சல்-தந்தி ஊழியர்களும் ஏனைய மத்திய அரசாங்க ஊழியர்களும் எப்படியும் குறிப்பிட்ட நாளில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டே தீருவது என்ற முடிவில் உறுதிகொண்டு விட்டனர். ஊழியர்களின் உறுதிப்பாடு கண்டு, முதற்கண் ஆணவத்தையும் அலட்சியத்தையும் துணைகொண்டு செயலாற்றிவந்த அரசாங்கத்திற்கு, வேலைநிறுத்த நேரம் நெருங்க நெருங்க நல்லறிவு தோன்றலாயிற்று. ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு இணக்கங்காட்ட இறுதியாக அரசாங்கம் இசைந்தது. அதன் பலன்தான் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டிருப்பது.

சர்க்கரை என்று ஏட்டில் எழுதிவிட்டால் இனித்துவிடாது. அதேபோன்று, இரண்டாவது சம்பள நிர்ணயக் குழுவை நியமித்துவிடுவதும், இடைக்கால நிவாரணமளிக்க இடைக்கால முடிவு அறிவிப்பது என்ற ஏற்பட்டினாலும் மட்டுமே மேற்படி ஊழியர்கள் திருப்தி கொண்டுவிடமாட்டார்கள். இடைக்கால நிவாரண முடிவு குறைந்தகால அளவில் தெரிவிக்கப்பட வேண்டும் என்பதுடன், அம்முடிவை உடனடியாக செயலாற்ற அரசாங்கம் முன்வரவேண்டும் என்பதையும் ஊழியர்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்றனர். அதை நிறைவேற்றிவைப்பதில்தான் அரசாங்கத்தின் நல்லெண்ணம் அடங்கியிருக்கின்றது.

இன்றியமையாப் பண்டங்களின் விலை தினம்தினம் ஏறிவருவதை அரசாங்கம் அறிந்தே இருக்கின்றது. இந்த நிலையில், விலை ஏற்றத்தின் காரணமாக பொதுமக்கள் படும் துயரத்தைத் துடைக்கத்தாம விரும்பவில்லையானாலும், தனது ஊழியர்களையாவது அத்தாக்குதலிலிருந்து காப்பாற்ற தம் மிச்சையாக அரசாங்கம் முன்வந்திருக்கவேண்டும். அவ்வாறு ஏற்கனவே முன்வந்திருக்குமானால், தம் ஊழியர்களின அதிருப்தியை எதிர்நோக்கி நடுக்குற வேண்டிய நிலை இந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கவே முடியாது.

தனது ஊழியர்களின் துயரைத் துடைக்கத் தாமாக முன்வருவதற்குத் தேவைப்படும் பெருந்தனமை தமக்கு இயல்பாக இல்லையானாலும், தாங்களாகக் கோரிய பிறகாவது தனது ஊழியர்களின் குறைகளைக் களைந்தெறிய இந்த அரசாங்கம் முன்வந்திருக்க வேண்டும்.

கோரிய பிறகுங்கூட தனது ஊழியர்களின் குறைகளை இரண்டாண்டுக் காலத்திற்கு மேலாக இந்த அரசாங்கம் அலட்சியப்படுத்திவந்திருக்கின்றது. தனது ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட முன்வந்த பின்னாதான் தனது ஊழியர்களின் விருப்பத்திற்கு இணங்க இந்த அரசாங்கம் முனவந்திருக்கின்றது. இது விரும்பத்தகாதது. மக்களாட்சி முறைக்கு மாறுபட்டது. இது விரும்பத்தகாத பயங்கரமான விளைவுகளை உள்ளடக்கிக் கொண்டிருப்பதுமாகும்.

தனக்காகவும் இல்லாது, பிறர் நயமாகக் கோரியும் நல்லறிவு பெறாது, தொல்லை தரத் தீர்மானித்த பிறகே நல்லறிவு பெறக்கூடிய அரசாக இந்தியப் பேரரசு இருந்தாலும், வேலைநிறுத்தம் உயிர்பெறுவதற்கிருந்த சில மணிகளுக்கு முன்பாவது நல்லறிவு பெற்று, தனது ஊழியர்களின் அல்லலைப் போக்க உடன்பட்ட இந்தியப் பேரரசின் நற்செயலை நாம் வரவேற்கின்றோம்.

‘குறள் நெறி அழிந்த காரணத்தை வெளிப்படையாகக் கூற அஞ்சுவானேன்?’

‘குழந்தையின் கவனத்தைத் திருப்ப முயலும் ஏழைத் தாயின் நிலையில் புலவர்கள் இருப்பானேன்?’

‘மனச் சுரங்கத்தை அறிவுச் சுரங்கமாக்க நாட்டில் நல்ல அறிவாளிகள் வேண்டும்’

‘குறளை தேசீய நூலாக ஏற்றுக் கொள்ளும் காலம் நெருங்கிவிட்டது!’ என்கிறார் அண்ணா

“திருக்குறளை பொருள்—அறம்—இன்பம் என்ற வரிசையில் மாற்றி அமைப்பதுதான் தற்காலத்திற்கு ஏற்றதாகும். பல்கலைக் கழகத்தில் புலவர் பெருமக்கள் குறளை நன்கு ஆராய்ந்து, உடனடியாக ஏற்றத்தக்கன இன்னின்ன கருத்துக்கள் என்றும், சிறிது பின்னர் ஏற்கத் தக்கவை இன்னின்ன என்றும் பிரித்துக்காட்ட வேண்டும். வள்ளுவர் காலத்தில் இருந்தவை இவை—இனி இருக்க வேண்டியவை இவை என்றும் பகுத்து, குறளுக்கு உரை காண வேண்டும்”

என்று, அண்ணா அவர்கள், சென்னை ‘செயின்ட் மேரீ’ஸ் மண்டபத்தில் நடைபெற்ற குறள் மாநாட்டில் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில், இன்று நாட்டில் பல்வேறு துறையில் உள்ளவர்கள் அனைவரும் திருக்குறளைப்போற்றமுன்வந்துள்ளனர் என்றும், திருக்குறளை தேசீய நூலாக ஏற்றிடும் காலம் நெருங்கிவிட்டது என்றும், இந்த நல்ல சூழ்நிலையைத் தாம் மனதார வரவேற்பதாயும் கூறினார்.

2000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் இருந்தவைகளையும், இனி இருக்க வேண்டியவைகளையும் வள்ளுவர் குறளில் கூறியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்னதாவது :—

“குறள் நெறி தமிழகத்தில் பரவிடும் நோத்தில், பிறர் தந்த கலைக்கும் கலாச்சாரத்திற்கும் இடம் கொடுத்ததின் காரணமாக தமிழர் மாண்புகள் நாசமாகிவிட்டன. இன்று தமிழர், குறள் நெறியைப் போற்றிடும் காலம் வந்துள்ளது.

“குறள் நெறியுடன் வாழ்ந்த தமிழரை, சமுதாயத்தின் நச்சுப் பூச்சிகள் என்று கூறியவர் எவர்? ஏன் தமிழர் சமுதாயம் சீர்கெட்டது?

“இன்று மீண்டும் குறள் நெறிப்படி, சாதி சமயமற்ற சமுதாயத்தை நிறுவிட முன்வர வேண்டும் என்று நான் புலவர்களையும் மற்றோரையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

“தங்க நகையினை வாங்கித் தர வேண்டும் என்று கேட்கும் குழந்தையின் கவனத்தை வேறு பக்கம் திருப்ப பலாப் பழத்தை வாங்கித் தரும் ஏழைத் தாயைப்போல, புலவர்கள் குறள் நெறி அழிந்த காரணத்தை வெளிப்படையாகக் கூறவும், அதை வலியுறுத்தவும் அஞ்சி, வேறு புராண—புண்ணிய காவியங்களையும், கதைகளையும் காட்டுகின்றனர்; இதைவிட புலவர்கள் தங்களது இயலாமையை வெளிப்படையாகத் தெரிவித்து விட்டு ஒதுங்கிவிடுவது மேலானது.

“நெய்வேலியில் நிலக்கரியைத் தோண்டிட தண்ணீர் ஊற்றுகளால் தடை ஏற்பட்டது; இன்று எஞ்சினீயர்களால் தண்ணீர் அப்புறப்படுத்தப்பட்டு நிலக்கரி தோண்டப்படுகிறது. மனச்சுரங்கம் நிலச்சுரங்கத்தைவிட ஆபத்தானது; ஆனால் அதன் ஆழத்தில் மிக அருமையான பொருள்கள் உள்ளன. மக்கள் மனதிலே ஊற்றெடுக்கும் தீய கருத்துக்களை நாம் நீக்கியாகவேண்டும்.

“இன்று நாம், உடலிலே சொரியும், சிரங்கும் வைத்துக்கொண்டு கையிலே மணமுள்ள அத்தரும் உள்ள நிலையில் வாழ்கிறோம். ‘வருணச் சிரமம்’ என்ற சொரி சிரங்கும் ‘திருக்குறள் நெறி’ என்ற அத்தரும் நம்மிடம் உள்ளன.

“நமது மனச்சுரங்கத்தை அறிவுச் சுரங்கமாக்கிட நல்ல அறிவாளிவேண்டும். வைரத்தை நல்ல வைரமாக்கிட பட்டை தீட்டுவதைப்போல, குறளையும் ஒளி பெறச் செய்து நாட்டு மக்களின் வாழ்வில் புதிய சுவையும், நம்பிக்கையும் ஏற்படச் செய்ய வேண்டும்.”

அந்நிய நிறுவனங்களின் இலாபத் தொகை

ரூ. 27 கோடி இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்டதாம்!

டில்லி, ஆக. 8—

இந்தியாவிலுள்ள வெளிநாட்டு நிறுவனங்கள் 1956—57-ல் ரூ. 27 கோடி இலாபத் தொகையை தங்கள் நாடுகளுக்கு அனுப்பியுள்ளதாம்.

இதில் ரூ. 22·4 கோடி இங்கிலாந்தைச் சோர்ந்ததாம்.

‘இந்தியாவிலுள்ள அந்நியக் கம்பெனிகள், தஙகளுடைய இலாபத்தைத் தங்கள் நாடுகளுக்கு அனுப்புவது பற்றிய விதியில் தற்போது எவ்வித மாற்றமும் செய்யும் நோக்கம் இல்லை’ என்று நிதி அமைச்சர் டி. டி. கே. மக்கள் சபையில் அறிவித்துள்ளார்.

மாநில வாக்காளர்களின் பூர்வாங்கப் பட்டியல்

குறைகளைத் திருத்திக் கொள்ள வாய்ப்பு

தமிழ் மாநிலத்தில் சென்னை நகரம் நீங்கலாக மற்றத் தொகுதிகளின் வாக்காளர் பூர்வாங்கப் பட்டியல்கள் 1—8—57 முதல் பல்வேறு மாவட்டங்களில் வெளியிடப்பட்டுள்ளன; அந்தந்தத் தொகுதி வாக்காளர் பதிவு அலுவலகங்களில் பட்டியல் வெளியிடப்பட்டிருக்கும்; பொதுமக்கள் அவற்றைப் பார்வையிடலாம்.

வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படத் தகுதியுள்ளவர்கள் தங்கள் பெயர் சேர்க்கப்படாமலிருந்தாலும் அல்லது பதிவு செய்யப்பட்டிருப்பதில் ஏதாவது தவறு இருந்தாலும் அவர்கள் அதை ‘ரெவினியூ டிவிஷனல்’ அதிகாரிக்குத் தெரியப்படுத்தலாம்.

பெயர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் 4-ம் எண் தாளிலும் ஆட்சேபணைகள் 5-ம் எண் தாளிலும் எழுதப்பட வேண்டும்.

வாக்காளர் பதிவு அலுவலகம், கிராம அதிகாரிகள், ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள், ஊராட்சி—நகராட்சி மன்ற ஆணையாளர்களிடமிருந்து தாள்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்வாங்கப்பட்டியல்கள் வெளியிடப்பட்டதிலிருந்து 21 நாட்களுக்குள் இந்தத் தாள்கள் பதிவு அஞ்சல் மூலமோ அல்லது நேரிலோ சேர்க்கப்பட வேண்டும்.

ஒருவர் பெயரை ஒரு தொகுதிப் பட்டியலிலிருந்து மற்றொரு தொகுதிப் பட்டியலுக்கு மாற்ற வேண்டுமானல், பெயரிருக்கும் பட்டியலுக்கு ஆட்சேபணை தெரிவித்து மாற்ற வேண்டிய தொகுதிப் பட்டியலில் சேர்க்க விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும்.

சாதாரண திருத்தங்களைக் கடிதம் மூலம் தெரிவித்தால் போதுமானது.

இன்று ரஷ்யாவில் உயர்தரக் கல்வி நிலையங்கள், விசேஷப் பயிற்சி உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை சுமார் 40 இலட்சமாக உயர்ந்துள்ளதாம்!

‘கிளர்ச்சியைத் தூண்டி தொல்லை விளைவிக்க நாம் என்றைக்கும் விரும்பியதில்லை’

‘எளியவர்கள் உழைப்பால் உண்டு கொழுப்போருக்கு பாதுகாப்புச் சட்டமாம்!

உழைப்பாளர்கள் கோரிக்கை எழுப்பினால் அவசரச் சட்டமாம்!

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் உரை

3—8—57 அன்று சென்னை எடப்பாளையத்தில் நடைபெற்ற 27-வது வட்ட தி. மு. கழகத்தின் முதலாண்டு விழாவில் துணைப் பெதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

“நல்லார்வம்கொண்ட தோழர்களின் விடாமுயற்சியின் காரணமாக, இந்த வட்டத்தில் தி. மு. கழகம் துவக்கப்பட்டு, நல்ல பல பணிகளை அது ஆற்றி வந்திருப்பதை அறிய நான் மகிழ்ச்சியடைகிறேன்.

“தேர்தலுக்குப் பின்னால் நாட்டில் ஒரு நல்ல சூழ்நிலை ஏற்பட்டுள்ளது; மக்களிடையே தி. மு. கழகம் புதிய உற்சாகத்தையும், ஆர்வத்தையும் உண்டாக்கியுள்ளது.

“எனவே, எதிர்காலத் திட்டங்களை நிறைவேற்ற நாம், விட்ட இடத்திலிருந்து நம் பணிகளைத் துவக்க வேண்டிய நிலையிலுள்ளோம். உங்களின் உற்சாகத்தால் தான் கழகம் வளர்ந்துவருகிறது.

“தேர்தல் காலத்தில் காங்கிரஸ்காரர்கள் மக்களுக்கு அளித்த உறுதிமொழிகள் அதிகம்; ஆனால், அவர்கள் தந்த உறுதிமொழிகளையெல்லாம் நிறைவேற்றினார்களா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆட்சி பீடத்தில் ஏறும்வரை பல உறுதிமொழிகளையளிப்பதும், ஆட்சியிலமர்ந்தவுடன் மக்களைச் சிறிதும் மதியாமல் எதேச்சாதிகாரம் செய்வதும்தான் காங்கிரஸ்காரர்களின் வழக்கம்.

“‘சுதந்தாம் கிடைத்தால் ஏழைப் பாட்டாளி மக்களின் இன்னல்களை ஒழிப்போம்; வரிப் பளுவைக் குறைப்போம்’ என்று பேசினார்களே, சுதந்தரம் கிடைத்து 10 ஆண்டுகளாக நடப்பதென்ன?

“அண்மையில் நடந்த தேர்தலின்போது இவர்கள் வாக்காளர்களிடம் சென்று கூறியதென்ன? ‘காங்கிரசுக்கு ஆதரவு தாருங்கள்’ என்று அவர்கள் கேட்ட நேரத்தில், பொய்யே சொல்லாத உத்தமபுத்திரர்களாகிய அவர்கள் என்ன சொல்லியிருக்கவேண்டும்? ‘ஐந்தாண்டுத் திட்டத்துக்குப் பணம் போதவில்லை; ஆகவே, நாங்கள் வரிகளை அதிகமாக விதிப்போம்; 112 பொருள்கள்மீது வரி போடுவோம்’ என்று சொன்னார்களா? ‘தீப்பெட்டி விலை உயரும்; இரயில்வே கட்டணம் அதிகரிக்கும்; முக்காலணு கார்டு ஒரணு ஆகும்; 2 அணு கவர் $2\frac{1}{4}$ அணு ஆகும்’ என்று அல்லவா அவர்கள் சொல்லியிருக்கவேண்டும்? அப்படிச் சொன்னார்களா?

“வேறு அவர்கள் கூறியது என்ன? ‘எங்களை நம்புங்கள்; தி. மு. கழகத்தை நம்பாதீர்கள்’ என்பதுதான். இவர்களை நம்பியவர்களின் கதி என்ன ஆயிற்று இப்பொழுது? பொதுமக்கள் இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

“ஒரு கிளர்ச்சியைத் தூண்டிவிட்டோ, அரசாங்கத்துக்குத் தொல்லை கொடுத்தோ கழகத்தை வளர்க்கவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு எப்பொழுதும் கிடையாது; அதை நாங்கள் விரும்புவதும் கிடையாது.

“எந்தக் கட்சியார் பட்டாளிகளின் துணைகொண்டு தேசியப் போராட்டத்தை நடத்தினார்களோ, ‘வெள்ளைக்காரனை வெளியேற்ற உதவுங்கள்; சட்டத்தை மீறுங்கள்; என்று கூறி ஏராளமானவர்களை யார் தூண்டிவிட்டுக் கிளர்ச்சி செய்தார்களோ, அதே காங்கிரஸ்காரர்கள்தான் இன்று, மற்றவர்களைப் பார்த்து, கிளர்ச்சியைத் தூண்டிவிடுவதாகக் கூறுகிறார்கள். ‘இந்து’ ‘மித்திரன்’ பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தால் காங்கிரஸ் கட்சியின் பழைய வரலாறு என்ன என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

“கடந்த 10 ஆண்டுகளாக இந்தியத் துணைக்கண்டத்தில் ஏராளமான-வெள்ளைக்காரன் காலத்தில் கூட நடக்காத—அவ்வளவு வேலை நிறுத்தங்கள் நடந்திருக்கின்றனவே, இந்தக் காங்கிரஸ் ஆட்சியில்! இதற்குக் காரணம் என்ன? அரசியல்விவேகம் படைத்தவர்கள் இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 100-க்கு 75 தொழிலாளர்களுக்காவது ஏதேனும் இந்த ஆட்சியால் நன்மை ஏற்பட்டிருக்குமானால் இந்த வேலைநிறுத்தங்கள் நடந்திருக்காது.

“வெள்ளைக்கார, ஏகாதிபத்திய வெறிபிடித்தவர்களை இந்தக் காங்கிரஸ்காரர்கள் கண்டித்தனர். நேருமுதல் மற்றக் காங்கிரஸ்காரர்கள் எல்லோரும் ஆலை முதலாளிகளை ‘கருங்காலி’கள் என்றனர்.

“இப்பொழுது ஆலை முதலாளிகளுக்கு ஆதாவாக இருந்து, ஏகாதிபத்திய வெறி தலைக்கேறி நிற்கின்றனர், அதே காங்கிரஸ்காரர்கள்!

“பண்டித மோதிலால் நேரு, சி. ஆர். தாஸ், மகாத்மா காந்தி மாளவியா, படேல், பிரகாசம், வ. உ. சிதம்பரம், திருப்பூர் குமரன், பெரியார் ஈ. வெ. ரா., டாக்டர் பி. வரதராசுலு, ஆச்சாரியார், சத்தியமூர்த்தி ஆகியோர் வளர்த்த காங்கிரஸ் இன்று ‘கருங்காலி’களின் கூடாரமாக விளங்குகிறது.

“தபால்—தந்தி ஊழியர்கள் 1947-ம் ஆண்டு கமிட்டி மூலம் தெரிவித்த யோசனையை நிறைவேற்ற முடியாதா? இவர்களுக்குச் சம்பள உயர்வு கொடுக்கப் பணம் இல்லை என்கிறார்கள்; ஏன் இலலை?

“ஆயிரக்கணக்காக சம்பளம் வாங்கும் பெரிய அதிகாரிகளின் சம்பளத்தைக் குறைத்து அதை இவர்களுக்குக் கொடுக்கக் கூடாதா? ‘ஆலைகளுக்குக் கிடைக்கும் இலாபத்தில் 50 சதவிகிதத்தை சர்க்காருக்குத் தரவேண்டும்’ என்று ஏன் ஒரு அவசரச் சட்டம் போடக்கூடாது?

‘பாட்டாளி மக்களை நசுக்குவதற்கு இயற்றும் அவசரச் சட்டத்தைப்போல், பண மூட்டைகளுக்கு ஒரு அவசரச் சட்டம் போட்டு, பணம் பிடுங்க இவர்கள் துணிவார்களா?

“ஏழைமக்களின் உழைப்பால் உண்டு கொழுக்கும் முதலாளிகளுக்குப் பாதுகாப்புச் சட்டம்; ஏழைகளுக்கு அவசரச் சட்டமா?

“வேலைநிறுத்தத்தை எதிர்க் கட்சிகள் ஏவிவிடுவதாக ஆட்சியிலிருப்போர் கூறிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

‘ஏவிவிடுவதென்றால் அது எங்களுக்கு தெரியாத ஒன்றல்ல; ஆனால் அதைச் செய்யவேண்டிய அவசியம் எங்களுக்கில்லை. ஏவிவிடுவதில் நம்பிக்கையோ, விருப்பமோ எங்களுக்குக்கிடையாது.

“கிளர்ச்சியை ஏவிவிட்ட கட்சிக்காரர்களெல்லாம் இன்று எந்தக் கதியை அடைந்துள்ளனர் என்பதையும் நாங்கள் அறியாதவர்களல்ல!”

இராமநாதபுரம் மாவட்டத்தில் துணைப் பொதுச்செயலாளர்

என். வி. நடராசன் நிகழ்ச்சிகள்

எஸ். முத்து, எஸ். எஸ். தென்னரசு கலந்துகொண்டனர்

20—7—57 மாலை, கோட்டை நத்தம்பட்டியில் தோழர் ப. கோபால் தலைமையில் தி. மு. க. பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். முத்து, எஸ். எஸ். தென்னரசு, தோழர் அசோகன் ஆகியோர் பேசியபின் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கழகக் கருத்துக்களை விளக்கிப் பேசினர்.

சிங்கம்புணரி:

21—7—57-ல், தி. மு. க. சார்பில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் தோழர் மாதவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது; தோழர் பெரி. அழகு வரவேற்றுப் பேசினார்: தோழர் எஸ். எஸ். தென்னரசு கழகக் கொள்கைகளை வலியுறுத்தினார்; தோழர் என். வி. நடராசன் அவர்கள் திராவிட நாடு பிரிவினையை விளக்கிப் பேசினர்.

மங்களக்குடி:

24—7—57 மாலை தேவகோட்டை அடுத்த மங்களக்குடியில் தி. மு. க. துவக்கவிழா நடைபெற்றது. தோழர் ரசாக் தலைமை தாங்கினார்: தோழர்கள் பாரூக், சுப்பிரமணியம், எஸ். எஸ். தென்னரசு, இராம. வெள்ளையன் ஆகியோர் பேசியபின் தோழர் என். வி. நடராசன் அவர்கள் நீண்டதோர் உரையாற்றினர்.

கொட்டகுடி:

25—7—57 மாலை இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். எஸ். தென்னரசு, சே. எஸ். சந்தானம் ஆகியோர் பேசினர்.

வ.உ.சி. நினைவுமண்டபக் கால்கோள் விழா

எட்டையபுரம், ஆக. 8—

சுதந்திரப் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி. அவர்களுக்கு ஒரு நினைவு மண்டபம் கட்டுவதற்கான கால்கோள் விழாவை முதலமைச்சர் காமராசர் ஆற்றியுள்ளார்.

இந்த நினைவு மண்டபத்தில் சிறிய தொழில்களை ஆரம்பித்து நடத்த சென்னை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறதாம்.

திராவிட வேதாந்த ஆராய்ச்சி அரங்கு

அண்ணமலைநகரில் நடைபெறும்

அண்ணமலைநகர், ஆக. 8—

பூனாவில் உள்ள பட்டப் பிற்காலப் படிப்புக்கான தென்னாட்டு நிறுவனம், திராவிட வேதாந்தத்தைப்பற்றி அண்ணமலை நகரில் ஒரு விவாத அரங்கு நடத்தும் என்று தெரியவருகிறது.

மதுமாநகர் கலை வளர்ச்சி மன்ற 6-வது ஆண்டுவிழா

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், சத்தியவாணிமுத்து கலந்துகொண்டனர்

சென்னை, ஆக. 8—

சென்னை — பெரம்பூரையடுத்த மதுமாநகரில், கலை வளர்ச்சி மன்றத்தின் ஆறாவது ஆண்டு விழா நேற்று மாலை சிறப்புற நடந்தேறியது.

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், சட்டமன்ற உறுப்பினர் தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர்கள் வி. எஸ். கோவிந்தராசன், ஆர். ஜார்ஜ், மதிவாணன் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

மன்றத் தலைவர் தோழர் டி. வேணுகோபால் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். மன்றச் செயலாளர் தோழர் பால்ராஜ் விழாவைத் துவக்கி வைத்து, ஆண்டு அறிக்கையைப் படித்தார்.

தோழர் மதிவாணன், கலை வளர்ச்சி மன்றத்தின் அவசியம் குறித்தும், பண்டைத் தமிழரின் சிறப்பியல்புகளை விளக்கியும், தமிழரின் கலை, பண்பாடு, வளர தி. மு. கழகக் கோட்பாடுகளைப் பின்பற்றி, மறுமலர்ச்சி காண வேண்டுமென்றும் பேசினார்.

அடுத்து தோழர் வி. எஸ். கோவிந்தராசன் பேசுகையில், “இதுபோன்ற மன்றங்கள், அறிவியக்கத்தின் பல கிளைகளாகும் என்றும், அறிவை அடிப்படையாகக்கொண்டு பணியாற்றுகிற மன்றங்கள் தி. மு. கழகத்தைத் தவிர வேறு எந்தக் கட்சியோடும் இணைய முடியாது என்றும், தி. மு. கழகத்திற்கும் மற்ற அரசியல் கட்சிகளுக்கும் பல வேறுபாடுகள் உண்டு என்றும், மற்றக் கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றும் ஒரே கொள்கையுடையன வென்றும், தி. மு. கழகம் ஆட்சியைக் கைப்பற்றுவதை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளவில்லை யென்றும், வடநாட்டுக்கு வாகை சூடி, பூர்ண கும்பம் வைக்கும் சர்க்கார் எதுவாயிருந்தாலும் அது இந்நாட்டுக்குப் பலன் தராது என்றும், இனத்தின் பெயரை வைத்து நாட்டு விடுதலை கோரும் ஒரு கட்சி தி. மு. க.—வைப்போல உலகில் எங்கும் இல்லை யென்றும், ‘சோஷலிச திராவிடக் குடியரசு அமைப்பதே தி. மு. கழகத்தின் அடிப்படை இலட்சியம் என்றும் கூறி, கலை வளர்ச்சி மன்றம் தி. மு. இலட்சியங்களைப் பின்பற்றி செயலாற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

அடுத்து தோழர் ஆர். ஜார்ஜ் பேசுகையில், வைதீகர்களுக்குக் கோயில் திருவிழாக்கள் எப்படியோ அதைப்போல, நாம் இப்படிப்பட்ட கலை வளர்க்கும் விழாக்களைக் கருதுகிறோம் என்றும், நாம் கலைபுணர்ச்சியுடன் இனவுணர்ச்சியும் கொண்டு செயலாற்றிவரும் ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவர்களென்றும் குறிப்பிட்டார்.

அடுத்து, தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களும், பொதுச் செயலாளர் அவர்களும் பேசினர்.

(பேச்சு, பின்னர் வெளிவரும்.)

கூட்டத் துவக்கத்தில் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களுக்கு ஒரு பாராட்டு இதழ் வாசித்தளிக்கப்பட்டது.

கூட்ட இறுதியில் பொதுச் செயலாளர் அவர்களால் தோழர் திருவேங்கடம் அவர்கள் ஆண் குழந்தைக்கு ‘செங்குட்டுவன்’ எனப் பெயரிடப்பட்டது.

விற்பனை வரி பற்றி அதிகாரி விசாரணை

சேலம், ஆக. 8—

விற்பனை வரி சம்பந்தமாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட அதிகாரி டாக்டர் லோகநாதன் 6-ந்தேதி சேலத்திற்கு வந்தார். வியாபாரிகளைச் சந்தித்து விற்பனை வரியில் உள்ள சங்கடங்களைப்பற்றிக் கேட்டறிந்தார்.

உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்றும், நார்ப் பட்டு கைத்தறி நெய்ய உபயோகப்படுத்தப்படுவதால் நார்ப்பட்டுக்கு விற்பனை வரிவிதிப்பிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்றும் அவரிடம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரி ஒரு சதவிகிதமாக விதித்திருப்பதால் ஓட்டல்களுக்கு விதித்திருக்கும் 2 சதவிகித விற்பனை வரி விகிதத்தை ஒரு சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்றும், ரூ. 30,000-க்குமேல் விற்பனையானல்தான் ஓட்டல்களுக்கு விற்பனை வரி விதிக்க வேண்டுமென்றும் ஓட்டல் சொந்தக்காரர் சங்கச் சார்பில் மகஜர் ஒன்று தரப்பட்டது.

விற்பனை வரியில் உள்ள சங்கடத்தைப் பற்றி வியாபாரிகள் அவரிடம் எடுத்துக் கூறினர்.

டாக்டர் லோகநாதன் குறிப்பிட்டதாவது:—

“வரியைக் குறைப்பது என்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல; ஆகவே, வரி குறையும் என எதிர்பார்க்காதீர்கள். விற்பனை வரி வசூல் செய்வதில் உள்ள சங்கடங்களைப் போக்கவேண்டிய வழிகளை ஆராயவேண்டும். சர்க்காருக்கு ஆலோசனை சொல்லத்தான் என்னை நியமித்து இருக்கிறார்கள். சென்னை சம்பந்தப்பட்டவரையில் நான் சிபாரிசு செய்யலாம்.

“விற்பனை வரி வசூல் செய்வதில் மாகாணத்திற்கு மாகாணம் வித்தியாசப்படுவதாகக் கூறினீர்கள். எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக வரி விதிக்க வேண்டியதுதான் முறை. இந்த விஷயத்தை இந்தியப் பேரரசினர் கவனிப்பார்கள் என நம்புகிறேன்.

“நார்ப் பட்டு முதலியவைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்பது குறித்து அகில இந்தியக் கைத்தறி போர்டுக்குத் தெரிவியுங்கள்; அது சிபாரிசு செய்தால் நிச்சயமாக சர்க்கார் ஏற்றுக்கொள்வார்கள். (ந. கி.)

இந்திய காப்பிநிறுவன தொழிலாளர் சங்கம்

கோவை-செழியன் கலந்துகொண்டார்

கோவை, ஆக. 8—

இந்திய காப்பி நிறுவன தொழிலாளர் சங்கத்தின், கோவை கிளை பொது உறுப்பினர் கூட்டம் 4—8—57-ல் நடைபெற்றது தி.மு. கழகச்சார்பில், தோழர் கோவை செழியன் கலந்து கொண்டு பேசினர்.

‘காப்பி நிறுவனம்’ இலாபத்தில் இயங்கிவரும்போ[illegible] 1,200 ஊழியர்கள் வே[illegible] இழக்கவேண்டிய நிலையை அ[illegible] சாங்கம் ஏற்படுத்துவது, மேலும் வேலையில்லாத் திண்டாட்டத்தை வளர்ப்பதாகும் என்றும், 1,200 குடும்பங்களை அல்லலுக்கு உ[illegible]ளாகச் செய்வதாகும் என்றும், இந்தப் போக்கைக் கண்டித்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும், சட்டசபை உறுப்பினர்களும், தொழிற்சங்கங்களும் பாடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காமராசர் தந்த விளக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"உங்களுடைய தேவை என்ன என்று முதலிலே நாம் புரிந்துகொள்ள வேண்டும். புரிந்துகொண்டவுடன், அதற்கு வேண்டிய வசதிகள்-வாய்ப்புகள்-பண வருவாய்க்குள்ள எதுக்கள் இவையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும். இவையெல்லாம் தெரிந்துகொண்டால்தான் நம்முடைய தேவையை நிறைவேற்றுவதற்கு எந்த வழியைக் கையாள முடியுமென்ற நிலைமையைத் தெரிந்துகொள்ள முடியும்; இதுதான் உண்மையான சுயராஜ்யமென்றார்.

"சமுதாய நலத் திட்டமென்றால் அது உங்கள் பகுதிக்கு வரவில்லையென்று நினைக்கின்றேன்; விரைவில் வந்துவிடும்-எல்லாக் கிராமங்களுக்கும் வந்துகொண்டிருக்கிறது. அதை ஐந்தாண்டுகளுக்குள்ளே நிறைவேற்ற வேண்டுமென்று ஆசைப்படுகின்றோம். ஒரு ஊருக்கு வேண்டிய பள்ளிக்கூடமோ, ஆஸ்பத்திரியோ, ரஸ்தாவோ வேண்டுமென்றால், அந்தக் கிராம மக்களெல்லாம் ஒன்றாகக் கூடி ஒரு முடிவெடுக்க வேண்டும்.—'நம் ஊருக்கு பள்ளிக்கூடம் வேண்டும் இந்த வருடம்; அடுத்த வருடம் ரஸ்தா வேண்டும்; அதற்கடுத்த வருடம் மின்சாரம் வேண்டும்—என்று முடிவு செய்து, எல்லோரும் சேர்ந்து கிராம நலனுக்காக உதவி செய்வது—உழைப்பின் மூலமாக உதவி செய்வது—இல்லாவிட்டால் பாதித் தொகை கொடுப்பது — இவையெல்லாம் கிராமத்தார் கூடிப்பேசி முடிவு செய்வதாகும்; ஆனால், இப்பொழுது நடைபெறுவது அப்படி நடைபெறவில்லை. ஏதோ ஊரிலே பழையபடியும் 10 பேர் பெரியவர்கள் இருப்பார்கள். அவர்கள் வீட்டில் உட்கார்ந்து பேசி நடக்கின்றது; இதை இல்லை என்று நான் சொல்லவில்லை; அது கொஞ்ச நாளைக்கு அப்படித்தான் நடைபெறும்—மறுத்து விடவும் முடியாது.

"எல்லோருக்கும் இப்பொழுது எதற்குக் கோபம்? இந்த ஊருக்கு நான் வருகிறேன்; வந்தவுடனே சேரியிலேபோய் கூட்டத்தைப் போட்டு, 'உங்களுக்கு என்ன வேண்டு'மென்றால் என்ன சொல்லப்போகிறீர்கள்? 'அந்த ஐயாவைக் கேளுங்கள்' என்று சொல்லப்போகின்றீர்கள்; இன்னொரு இடத்திற்குப் போனாலும், 'ஐயாவைக் கேளுங்கள்' என்றுதான் சொல்லப்போகின்றீர்கள்; இதுதான் நம்முடைய பழக்கம். இருந்தாலுங்கூட ஊர் முடிவெடுத்தால் அந்த முடிவையாவது எல்லோரையும் கூப்பிட்டு உட்கார்ந்து பேசினால்தான், அவர்களுக்கும் இதில் பங்கிருக்கிறது என்ற உணர்ச்சிவரும், பணம் கொடுப்பது யாராவது இருக்கலாம்—பெரியவர்கள் பணம் கொடுக்கலாம்—பணம் படைத்தவர்கள் பணம் கொடுக்கலாம்—காரியங்கள் செய்யலாம்; விஷயம் தெரிந்த புத்திசாலிகளாக இருப்பவர்கள் திட்டங்களை வகுத்துக் கொடுக்கலாம்; அதை நிறைவேற்றலாம். இருந்தாலுங்கூட அதையெல்லாம் விளக்கிக் காட்டியபின், அதற்கு உங்களுடைய சம்மதம் இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள நீங்கள் அதைப்பற்றி அபிப்பிராயம் சொல்லுவதற்கும் உரிமை வழங்கினால் எல்லோருக்கும் கூட்டுப் பொறுப்பாக இருக்க முடியும். அத்தகைய நல்ல உணர்ச்சியை உண்டாக்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றேன்.

"அந்த ஆசையினால்தான் கிராம சமுதாய நலத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன; அத்திட்டங்கள் எல்லா பகுதியிலும் விஸ்தரிக்கப்படுகின்றன; அதைப்போலவே இந்த பகுதியிலும் விஸ்தரிக்கப்படும். அதற்கு நீங்கள் முழுமனதோடு ஒற்றுமையாக இருந்து, வித்தியாசங்களை மறந்து அதற்குப் பாடுபட வேண்டும். நம்முடைய நாட்டுக்கு பெரிய குறை பெரிய வித்தியாசம். ஜாதியின் பெயரால் வித்தியாசம்; இவை போன்ற வித்தியாசங்கள் நம்முடைய சமுதாயத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும். ஒன்றுபட்ட உணர்ச்சி நமக்கு வேண்டும். ஒன்றுபட்ட உணர்ச்சியிலே கடமையும், பொறுப்புணர்ச்சியும் நமக்கு ஏற்படவேண்டும். அப்பொழுதுதான் பெரிய நல்ல காரியங்களை சாதித்துக்கொள்ள முடியும். இந்தக் காரியங்களையெல்லாம் செய்வதற்கு உங்களுடைய ஒத்துழைப்புத் தேவை.

"இதிலே கட்சி வித்தியாசமில்லை. இதில் ஸ்ரீமான் அண்ணுதுரை அவர்களோ நானே; குறுக்கே நெடுக்கே பேசிக்கொண்டிருக்கலாம்; சட்டசபையிலே பேசலாம்; வெளியே பேசலாம்; அரசியல் மேடைகளிலே பேசலாம்—இதைப் போன்ற காரியங்களிலே ஒருத்தருக்கொருத்தர் வேறுபாடோ மாற்று எண்ணங்களோ இருக்கமுடியாது. ஆகையினால் எல்லோரும் ஒன்றுபட்டு இந்தக் காரியங்களை நல்ல முறையிலே செய்யவேண்டுமென்று ஆசைப்படுகின்றோம்.

"அதற்கு நீங்கள் எப்படி, 'எங்களுக்கு பள்ளிக்கூடம் வேண்டும்—கிணறு வேண்டும்—ஆஸ்பத்திரி வேண்டும் — ரோடு வேண்டும்' என்று கேட்கின்றீர்களோ, அதைப்போலவே நாங்களும் உங்களைக் கேட்கின்றோம்—'எங்களுக்கு உங்களுடைய உதவி வேண்டும்; உங்களுடைய உதவியில்லாமல் செய்ய முடியாது'

"நாங்கள் ஏதோ பெரிய திட்டமென்று சொல்லிவிட்டுப் போகலாம். உங்களுடைய ஒத்துழைப்பு இருக்க வேண்டும், உங்களுக்கு திட்டத்தின் இலாபம் நஷ்டம் தெரிந்துகொள்ளக்கூடிய நிலைமை ஏற்படவேண்டும். அப்படியில்லாவிட்டால் அதைச் செய்தும் பிரயோசனம் இல்லாமல் போய்விடும். ஆகையினால் உங்களுடைய மனப்பூர்வமான ஒத்துழைப்புதான் தேவை.

"மக்களுடைய புதிய வாழ்வுக்குத் தகுந்த முறையில் நாம் வாழ்க்கைத் துறையை மாற்றியமைக்கச் செய்யும் முயற்சிகளிலே ஈடுபட வேண்டும் என்ற பொதுக் காரியங்களிலே ஈடுபட வேண்டியது அவசியம். அத்தகைய எழுச்சி உங்களுக்கு ஏற்பட வேண்டுமென்று நான் ஆசைப்படுகின்றேன்.

"நம்முடைய நாடு நான் ஏற்கெனவே சொல்லியதைப் போல கிராமங்கள் நிறைந்த நாடு. பெரிய பட்டணங்களில் கொஞ்சம் பேர்தான் இருப்பார்கள்; முன்பு ரொம்பப்பேர் இருந்தார்கள், அவர்களுக்கு ஒரு வசதி ஏற்கனவே ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது; அதைப்போன்ற வசதி ஏற்படவேண்டுமென்று ஆசைப்படுகிறோம். காஞ்சீபுரத்திலோ அரக்கோணத்திலோ இருப்பவர்களுக்கு எவ்வளவு வசதி வேண்டுமோ அவ்வளவு வசதி வேண்டுமென்று ஆசைப்படுகின்றோம். அது செய்து கொடுக்கப்பட வேண்டுமென்றும் ஆசைப்படுகின்றோம். அதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

"இந்தக் காரியங்களையெல்லாம் செய்வது ஒருபுறம் நிற்க, பொருளாதாரத் துறையிலும் உயர்வு நமக்குக் கட்டாயம் வேண்டும். விளக்கு வந்தாயிற்று—குடிக்கத் தண்ணீர் வந்தாயிற்று — பள்ளிக்கூடம் வந்தாயிற்று—ஆஸ்பத்திரி வந்தாயிற்று—ரோடு வந்தாயிற்று—சாப்பாடு இல்லையென்றால் முடியுமா? அதுதான் முக்கியப் பிரச்சினை, நம்முடைய நாட்டிலே.

"கிராமத்தினர் — ஏழைகளாகக் கோடிக்கணக்காக இருக்கிறார்களே! அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட வேண்டுமே! அதற்கு வேண்டிய வகைகளை நாம் செய்ய வேண்டும். முக்கியமாகக் கிராமப் பகுதியில் நான் பார்க்கிறேன், போகும் இடங்களில் ஆஸ்பத்பத்திரி—பள்ளிக்கூடம்--ரோடு கேட்பார்கள். எங்களுக்குச் சாப்பாட்டுக்கு ஏதேனும் உண்டா? விவசாயத்தை அதிகப்படுத்த முடியுமா? எங்களூரில் தொழிற்சாலை வைக்க முடியுமா? எங்களுக்கு வருவாய் காணவில்லையே! விலைவாசிகள் கூடிக்கொண்டிருக்கிறதே! இதற்கும் எங்கள் வருவாய்க்கும் கட்டிவரவில்லையே! வருவாயை அதிகப்படுத்த அரசாங்கம் திட்டம் வைத்திருக்கின்றீர்களா? விவசாயத்தை நல்ல முறையிலே நடத்தப்போகின்றீர்களா? சிறு தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகச் சொல்லுகின்றீர்களே? எந்த முறையிலே பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது? எங்களுடைய கிராமத்துக்கு அந்தப் பாதுகாப்பு கிடைக்குமா? கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்துவதாகக் கூறுகின்றீர்களே! அதனுடைய நன்மை என்ன?—என்பதையெல்லாம் பற்றிக் கேட்க வேண்டும் நீங்கள்!

"அது முக்கியமான பிரச்சினை. அதை நாம் மறந்துவிடுகிறோம். காரணம் என்னவென்றால், 'இதெல்லாம் என்னத்துக்கப்பா! இதெல்லாம் விவசாயம்! இதெல்லாம் அவர்களா சொல்லப்போகிறார்கள்? அவர்கள் சொல்லியா நமக்குத் தெரியப்போகிறது? நமக்கேத் தெரியும்? நாம் செய்துகொண்டிருக்கலாம்!' என்று செய்துகொண்டிருக்கின்றீர்கள். வாஸ்தவம்! உங்களுக்குத் தெரியும்! எங்களுக்கு என்ன தெரியும்? நகரத்திலிருந்து வந்து நாங்கள் ஏரா பிடித்துக்கொண்டிருக்கிறோம்? உங்களுக்குத் தெரியும்; இருந்தால்கூட இப்பொழுது இருக்கிற நிலைமையிலே புதிய முறைப்படி நம்முடைய நிலத்தில் அதிகமாக உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பல வசதிகள் வாய்ப்புகள் இருக்கின்றன; அதையும் பயன்படுத்தியாக வேண்டும்.

"இதைப் போன்ற பொருளாதார நிலைமை உயர்வதற்கும் வேண்டிய எல்லா நல்ல காரியங்களையும் செய்வதற்கு நீங்கள் ஒத்து இருந்து காரியங்கள் செய்ய வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

"மழையைக்கூட பொருட்படுத்தாமல் அமைதியாக — பொறுமையாக இருந்து கேட்ட உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் உங்களுடைய ஊருக்கு—இந்த ஊருக்கு எப்படி வராமல் போவேன் என்பது எனக்குத் தெரியாது.

"இப்பொழுது நான் எல்லா ஊர்களுக்கும் போய்க்கொண்டிருக்கிறேன். கிராமங்களுக்குப் போகவே எனக்கு ரொம்ப ஆசை—பிரியம். அதிலும் கிராம ஜனங்களைப் பார்த்துப் பேசுவதில் ரொம்பப் பிரியம்.

"ஆனால் அவர்கள் கேட்பதையெல்லாம் செய்துகொடுத்துவிட முடியுமென்பதல்ல; முடியாவிட்டால்கூட அவர்கள் சொல்லக்கூடிய விஷயங்களை அனுதாபமாகக் கேட்டு, அவர்கள் குறைபாடுகளை, அவர்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொடுப்பதற்கு ஏதாவது மார்க்கம எங்கேயாவது உண்டா? உண்டேயானால்—வசதியிருக்குமேயானால் அதை ஏன் செய்துகொடுகக்க் கூடாது என்பதை யோசனை செய்து செய்து கொடுக்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றேன். அதைப்போலவே உங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் நன்முகப் பரிசிலனை செய்துபார்த்து எந்தெந்த முறையில் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்வதற்கு நான் முயற்சி எடுக்கின்றேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

"மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

அகமதாபாத்தில் வேலை நிறுத்தம்; 75,000 மாணவர்கள் பங்கேற்பு!

மகாகுசராத் மாநிலம் கோரி கிளர்ச்சி; ஓராண்டு விழா கொண்டாட்டம்

அகமதாபாத், ஆக. 9—

அகமதாபாத் நகரில் நேற்று வெற்றிகரமாக 'அர்த்தால்' நடைபெற்றிருக்கிறது.

மகாகுசராத் கிளர்ச்சி துவங்கி, ஓராண்டு ஆவதை ஒட்டி, நேற்று நகர் முழுதும் வேலைநிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டது.

கடைகள் எல்லாம் மூடிக்கிடந்தன; பள்ளிகளும், கல்லூரிகளும் அப்படியே! வீதிகள் தோறும் மாணவர்களும், மகாகுசராத் பரிஷத் தொண்டர்களும் ஒன்று கூடி நின்றுகொண்டனர்.

வாடகை மோட்டார்களோ, பஸ்களோ, டோங்காக்களோ எவையும் வெளிவரவில்லை.

சில தனிப்பட்டவர்களின் கார்கள் மட்டும் போய்வந்துகொண்டிருந்தனவாம்!

வெகு அமைதியாக இந்த வேலை நிறுத்தமும், போக்கு-வரத்துக் கட்டுப்பாடும் நடைபெற்று வெற்றியுற்றிருக்கின்றன.

அர்த்தாலில் சுமார் 75,000 மாணவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சோஷலிஸ்டுகள் போராட்டம்

சட்டமன்ற உறுப்பினர் நல்லசிவம் கைது

சென்னை, ஆக. 10—

சென்னை சட்ட மன்ற உறுப்பினர் திரு. நல்லசிவம், மற்றும் ஆறு தொண்டர்கள் நேற்று கோட்டைக்கு வந்து, 'கட்டபொம்மன் கோட்டை' என்று செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குப் பெயரிட வேண்டும் என்று முழக்கமிட்டனர்.

சென்னைக்கு 'தமிழ் நாடு' என்று பெயரிட வேண்டும் என்ற முக்கிய பிரிவைக் கொண்ட 16 கோரிக்கைகளை அவர்கள் வற்புறுத்தினர்.

அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு ரூ. 30 அபராதம் விதிக்கப்பட்டுள்ளனர்.

செங்கற்பட்டு மாவட்ட

திராவிட முன்னேற்றக் கழகச்

செயற்குழுக் கூட்டம்

"18-8-57 காலை 9-மணிக்கு, செங்கற்பட்டு மாவட்ட செயற்குழுக் கூட்டம் ஆரணி தி.மு. கழகப் பணிமனை மாடியில் நடைபெறும்.

"பொருள் :—புதிய கழகங்களை அங்கீகரித்தல்; வரவு-செலவுக் கணக்கு பரிசீலித்தல்; மாநாடு நடத்துவதுபற்றி முடிவெடுத்தல்; மற்றும் மாவட்டச் செயலாளர் கொண்டுவரும் தீர்மானங்கள்.

மாவட்டப் பிரதிநிதிகள் தவறுமல் வருகை தருமாறு, செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் தி. ந. சம்பந்தம் கேட்டுக் கொள்கிறார்.

கழகக் கூட்டங்கள்

★

பக்கனுடு :

ஆரம்பப் பாடசாலை திடலில்
தி. மு. கழகத் துவக்கவிழா
12—8—57 மாலை 4 மணிக்கு
தலைவர் : ப. கண்ணன்
பேசுவோர் :
இரா. தாண்டவன்
ப. இராமலிங்கம்
இராசமாணிக்கம்
க. வை. சுந்தரேசன்
த. க. குருநாதன்
அ. ஆறுமுகம்

★

காட்டுமன்னர்குடி :

சிவன் கோவில் எதிரில்
12—8—57 மாலை 5 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர் : சே. தெய்வசிகாமணி
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
பொன். சோக்கலிங்கம்
புலவர் ஆறுமுகம்

★

ஆண்டாங்கோவில் :

ரெட்டிபாளையம் —புதூரில்
11—8—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : கே. குழந்தைசாமி
பேசுவோர் :
க. அறிவழகன்
மு. குழந்தைவேல்
எம். கே. கரிகாலன்
எம். ஆர். இராமசாமி
ஏ. அம்மையப்பன்

★

தென்னிலை :

தி. மு. கழகத் துவக்கவிழா
12—8—57 மாலை 7 மணிக்கு
தலைவர் :
கே. எஸ். எஸ். பெரியார்
பேசுவோர் :
க. அறிவழகன்
மு. குழந்தைவேல்
என். இரத்தினம்
எம். கே. கரிகாலன்

★

ஈரோடு :

காரைவாய்க்கால்மைதானத்தில்
11—8—57 மாலை 7 மணிக்கு
பேசுவோர் :
கோவை செழியன்
அப்பாவு

34—வது வட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

சென்னை நுங்கம்பாக்கம் ஷை வட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம் 11—8—57 காலை 8 மணிக்கு 8 சி. இராமநாயக்கன் தெரு, கழக மனையில் நடைபெறும். முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்குவரும் என செயலாளர் இரா. சம்பந்தம் அறிவிக்கிறார்.

விவாத அரங்கு

11—8—57 காலை 10 மணிக்கு திருவல்லிக்கேணி சே. எஸ். பாண்டியன் படிப்பகப் பணிமனையில் (1/2 சிவராமன் தெரு) ஷை விவாத அரங்கு நடைபெறும். செல்லக் கபிலன் தலைமையில் திருக்குறள் ஆரியமா, திராவிடமா என்பதுபற்றிப் பலர் விவாதிப்பர்.

புதுக்கோட்டை, சர்க்கார் கடைநிலை ஊழியர் சங்கம்

11—8—57 பிற்பகல் 3மணிக்கு புதுக்கோட்டை டவுன் பாங்கு மாடியில் தோழர் வி. நாகராசன் தலைமையில் நடைபெறும். அதுபோது நிர்வாகிகள் தேர்வு நடைபெறும். மற்றும் சில பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.